**தலைப்பு 322 – தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட கருத்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

**(அ) மீண்டெழும் செலவினங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் நிகழ்ச்சித் திட்டங்களின் பிரகாரம் செலவின பொழிப்பு ACA 2 (ii) படிவத்தில் ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளின் கீழ் வகைப்படுத்தப் பட்டிருந்த செலவின விடயம் 1101 உள்நாட்டு பிரியாணச் செலவினம் ரூபா 2,086,572 தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் சம்பளம் மற்றும் வேதனங்கள் மற்றும் ஏனைய ஊழியர் நலன்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிச் செயலாற்றல் கூற்று சீராக்கம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | செலவினங்கள் சரியான வகைப்படுத்தலின் கீழ் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டில் மொத்தம் ரூபா 346,500 ஆன மூலதனச் செலவின விடயங்கள் செலவின விடயம் 1201 எழுதுகருவிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் தேவைப்பாட்டின் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் சொத்துக் கணக்குகளை சீராக்கும் போது இச்சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மூலதனச் செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டு கண்க்கீடு செய்யப்பட வேண்டும். |
| (iii) | உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செலவின விடயம் 322-2-1-11-2506 இன் கீழ் மொத்தம் ரூபா 2,386,677 ஆன 38 மீண்டெழும் செலவினங்கள் காண்பிக்கப்பட்டிருந்தன. | இம் மீண்டெழும் செலவினம் மூலதன செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மீண்டெழும் செலவினம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யபப்பட வேண்டும். |

**(ஆ) மூலதனச் செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 322-2-1-11-2506 உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செலவின விடயத்தின் கீழ் ரூபா 22,874,052 கூட்டுத்தொகையான மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செலவினம் மற்றும் 19 மூலதனச் சொத்துக்கள் கையேற்றல் செலவின விடயங்கள் காண்பிக்கப்பட்டிருந்தன. | உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக தேவையான மூலதனச் செலவினம் இச்செலவின விடயத்திலிருந்து செலவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**(இ) நிதியல்லாத சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண மீதி ரூபா 7,618,013,766 என நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அதற்குரிய திறைசேரி அச்சுப்பிரதி நிதியல்லாத சொத்துக்கள் கூற்று SA82 படிவத்தின் பிரகாரம் அத்திகதியில் அம்மீதி ரூபா 7,585,753,454 ஆக இருந்தமையால் ரூபா 32,260,312 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | மேலும் சீராக்க வேண்டிய மீதிகள் 2022 ஆம் ஆண்டின் போது சீராக்கி அறிக்கையிடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | திறைசேரி புத்தகங்களுடன் ஒப்பிட்டு சரியான கணக்குகள் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் திறைசேரி அச்சுப்பிரதி நிதியல்லாத சொத்துக்கள் கூற்று SA82 படிவத்தின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் நிதியல்லாத சொத்துக்களை கையேற்றல் ரூபகா 91,231,407 ஆக இருந்த போதும் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மூலதனச் சொத்துக்களை கையேற்றல் ரூபா 91,767,957 ஆக இருந்தமையால் ரூபா 536,550 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | இது தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு மீண்டும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | திறைசேரி புத்தகங்களுடன் ஒப்பிட்டு சரியான கணக்குகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டினுள் சொத்துக்கள் விற்பனையால் பெறுமதி குறைவடைந்தமை அல்லது கைதவிர்ப்பதற்கும் மேற்கொள்ளப்படாதிருந்த போதும் திறைசேரி அச்சுப்பிரதி நிதியல்லாத சொத்துக்கள் கூற்றின் SA82 படிவத்தில் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள், வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 29,767,326 தொகை நிதியல்லாத சொத்துக்கள் கையகற்றலாக காண்பிக்கப்படடிருந்தது. | இது தொடர்பாக பரீட்சிக்கப்பட்ட கணக்காய்விற்கு அறிக்கையிடுவதாக அறவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் அகற்றல் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (iv) | திணைக்களத்தின் செலவின விடயம் 2105 காணி மற்றும் காணி அபிவிருத்திச் செலவினங்களின் கீழ் சம்பளம், தொலைபேசி, திருத்தங்கள், மேலதிக நேர படிகள், மின்சார பட்டியல்கள் கொடுப்பனவு எரிபொருள் நீர் பட்டியல், பிரயாணச் செலவினம் ரூபா 67,943,891 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் காணி மற்றும் காணி அபிவிருத்தியின் கீழ் மீண்டெழும் செலவினம் மதிப்பீடு செய்யாமல் வருடாந்த மதிப்பீட்டினை தயாரிப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டியதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டு சரியான செலவின விடயங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (v) | மீளாய்வாண்டின் 2101, 2102, 2103 மற்றும் 2104 ஆன 04 மூலதன செலவின விடயங்களின் கீழ் மூலதனச் சொத்துக்களை கையேற்பதற்காக ரூபா 23,582,498 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த திறைசேரி அச்சுப்பதிவு நிதியல்லாத சொத்துக்கள் கூற்றின் SA82 படிவத்தில் நிலையான சொத்துக்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்து விடயங்கள் சரியாக வகைப்படுத்தப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை கையேற்றல் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (vi) | தாவரவியல் பூங்கா நிதியத்தின் சொத்துக்களாக 2010 ஆம் ஆண்டிலிருந்து இனங்காணப் பட்டிருந்த ரூபா 789,631,963 ஆன சொத்துக்களிலிருந்து ரூபா 305,587,837 ஆன கட்டிட திருத்தங்கள் மற்றும் காணி அபிவிருத்தி வேலைகள் மற்றும் ரூபா 843,297 ஆன நூலக புத்தகங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் சொத்துக் கணக்கிற்கு உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்திற்குரிய சகல சொத்துக்களும் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**(ஈ) காசுப் பாய்ச்சல் கூற்று**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்கான முற்பண அறவீடு ரூபா 29,382,244 ஆக இருந்த போதும் அது ரூபா 24,656,611 ஆகவும் ரூபா 4,725,633 காசு உட்பாய்ச்சல் குறைவாக காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் முற்பணக் கொடுப்பனவு ரூபா 30,451,860 ஆக இருந்த போதும் அது ரூபா 28,122,342 ஆக ரூபா 2,329,518 காசு வெளிபாய்ச்சல் குறைவாக தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | முற்பண அறவீடு மற்றும் கொடுப்பனவு ரூபா 24,656,611 தொகை மற்றும் ரூபா 30,451,861 என ஏனைய திணைக்களங்களுக்கு மேற்கொண்ட குறுக்கு பதிவின் மூலம் தீர்வு செய்யப்படும் முற்பணங்கள் தவிர இத்திணைக்களத்தினால் அறவிடப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட முற்பணங்கள் மாத்திரம் ஆகும். | முற்பண அறவீடு மற்றும் தீர்வு செய்தல் சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டில் தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் செயளற்பாட்டு செலவினங்களுக்குரிய காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 568,602,369 ஆக இருந்த போதும் அது ரூபா 507,950,626 என ரூபா 60,651,743 ஆன காவுசு வெளிப்பாய்ச்சல் குறைத்து தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்துர்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் திறைசேரி படிவத்தின் பிரகாரம் ACA-2(II) இல் இனங்காணப்பட்ட செலவினம் மாத்திரம் காண்பிக்கப்பட்டுள்ளன. | தொழிற்பாட்டு செயற்பாடுகள் சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (iii) | உதவுத் தொகை மற்றும் மாற்றல்களுக்குரிய காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 80,095,987 ஆக இருந்த போதும் அது ரூபா 1,476,034 எனக் காசுப்வெளிப்பாய்ச்சல் ரூபா 78,619,953 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | உதவுத் தொகை மற்றும் மாற்றல்களுக்குரிய காசு வெளிப்பாய்ச்சலாக ரூபா 1,476,034 என நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மீண்டெழும் செலவினத்தின் கீழ் திறைசேரி படிவத்தின் பிரகாரம் ACA-2(ii) இல் இனங் காணப்பட்ட செலவினங்கள் மாத்திரம் காண்பிக்கப்பட்டன. | உதவுத் தொகை மற்றும் மாற்றல்கள் சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டில் ஏனைய செலவின விடயங்களுக்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 18,564,455 தொகையாக இருந்த போதும் அது ரூபா 16,168,340 என காசு | ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவிடுவதற்காக ஓய்வூதிய திணைக்களத்தின் செலவின தலைப்பில் வரவு | ஏனைய செலவின விடயங்களுக்காக செலவிடப்பட்ட செலவினங்கள் சரியாக இனங் |

| | | | |
|---|---|---|---|
| | வெளிப்பாய்ச்சல் ரூபா 2,396,115 குறைத்து செயற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | வைக்கப்பட்டு திணைக்களத்தின் முற்பணக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட குறுக்குப் பதிவு மூலம் ரூபா 2,396,115 குறைத்து கணக்கீடு செய்யப்பட்ட தொகையாகும். | காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (v) | மீளாய்வாண்டின் போது பௌதீக சொத்துக்கள் நிர்மாணம் அல்லது கொள்வனவு அல்லது ஏனைய முதலீடுகளை கையேற்றல் ரூபா 91,767,956 ஆக இருந்த போதும் ரூபா 231,039,652 என முதலீட்டு செயற்பாடுகளால் உருவாகிய காசுப் பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் காசு வெளிப் பாய்ச்சல் ரூபா 139,271,696 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | முதலீட்டு கையேற்றல்களுக்கு உரிய காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 231,039,652 என நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மூலதனச் செலவினத்தின் கீழ் திறைசேரி படிவத்தின் பிரகாரம் ACA-2(ii) இல் இனங்காணப்பட்ட செலவினமாகும். | முதலீட்டு செயற்பாடுகள் சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது மீண்டெழும் மற்றும் மூலதன செலவினத்திற்காக ரூபா 1,115,680,000 ஆன தேறிய நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அதில் ரூபா 375,172,598 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அது மொத்த நிதிஏற்பாட்டில் 34 சதவீதமாக இருந்தது. மேலும் சேமிப்புக்களில் 92 சதவீதம் மூலதன சேமிப்புக்களாக இருந்ததுடன் அது தேறிய மூலதன நிதிஏற்பாட்டில் 60 சதவீதம் அதாவது ரூபா 344,440,348 ஆக இருந்தது. | மூலதன மற்றும் மீண்டெழும் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,115,680,000 மற்றும் சேமிப்புக்கள் ரூபா 375,172,598 என ஏற்றுக் கொள்கின்றேன். | நிதிஏற்பாடு செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 28 மூலதன மற்றும் மீண்டெழும் செலவின விடயங்களில் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 644,330,000 தொகையில் சேமிப்புக்கள் ரூபா 355,882,937 அதாவது 55 சதவீதமாகும். அச்சேமிப்புக்கள் ஒவ்வொரு செலவின விடயத்தின் தேறிய நிதிஏற்பாட்டில் 10 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினை எடுத்திருந்தது. | 28 செலவின விடயங்களில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதாக ஏற்றுக் கொள்கின்றேன். | தேவைப்பாடு உரிய வகையில் இனங்காணப்பட்டு முன்னரே திட்டங்களைத் தயாரிக்கப்பட வேண்டியதுடன் திறமையான முாமைத்துவத்துடன் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்பு சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டுக் கோவையின் 193 ஆம் விதி | பேராதெனிய பூக்கள் வளர்ப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு, ஹக்கல மற்றும் கம்பஹா தாவரவியல் பூங்காக்களின் 31 உத்தியோகத்தர்கள் 5 ஆண்டு முதல் 23 ஆண்டுகளாக ஒரே சேவை நிலையத்தில் சேவை புரிந்து வந்தனர். | கட்டணங்களை அறவிடும் உதவியாளர்கள் எதிர்காலத்தில் இடமாற்றம் செய்யப்படுவதாகவும் ஏனைய ஊழியர்கள் பூங்காக்களை சுற்றி குடியிருப்பதாலும் பொருளாதார சிக்கல்களின் பேரில் இடமாற்றம் செய்யப்படவில்லையெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | செயற்பாட்டுக் கோவையின் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2011 பெப்ரவரி 10 ஆந் திகதிய அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் 2011/1 ஆம் இலக்க சுற்றறிக்கை | நுவரெலியா மாவட்டத்தில் எந்தவொரு நிர்மாண செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் தகைமை சான்றிதழ் / பரிந்துரையொன்று பெற்றுக்கொள்ளல் கட்டாயமாக இருந்த போதும் ஹக்கல தாவரவியல் பூங்காவில் அமைந்துள்ள கபடேரியா சிற்றுண்டிச்சாலை நிர்மாணத்திற்குரிய அவ்வாறான சான்றிதழ் அல்லது பரிந்துரையொன்றை 2021 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பெற்றுக் கொண்டிருக்கவில்லை | கருத்து தெரிவிக்கவில்லை | சான்றிதழ் / பரிந்துரையொன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

## 2.3 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் 02 ஆண்டுளை மிகைத்துள்ள வைப்புக்கள் அனைத்தையும் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 10,639,463 கூட்டுத்தொகையான 113 வைப்பு மீதிகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் இக்குறைபாடுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | கம்பஹா தாவர பூங்காவின் மலசலகூட முறைமையொன்றையும் களஞ்சிய கட்டிடமொன்றையும் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2021 ஏப்ரல் 12 ஆந் திகதி பெறுமதி சேர் வரியின்றி (வெட்) ரூபா 5,969,866 தொகைக்கு 2021 ஒக்தோபர் 12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்குரிய மின்சார உப பாகங்கள், நீர் உப பாகங்கள் மற்றும் ஆரோக்கிய உபபாகங்களைப் பொருத்துதல் பீங்கான் கற்கள் பொருத்துதல் போன்ற செயற்பாடுகளை 2022 சனவரி 12 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்திருக்கவில்லை. | கட்டிடத்திற்கு தரையோடு பதிப்பதற்காக ஒப்பந்தக்காரருக்கு தேவையான தரையோடுகளை பெற்றுக் கொள்வதற்கு முற்பணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் தரையோடு பதிக்கும் செயற்பாடுகள் முடியும் வரை மின் உப பாகங்கள், நீர் உப பாகங்கள் மற்றும் ஆரோக்கிய உப பாகங்கள், கதவுகளைப் பொருத்துவதற்கு முடியாதிருந்தது. | குறித்த நிர்மாண செயற்பாடுகளை உரிய காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பூக்கள் வளர்ப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவின் சங்கிலி இணைப்பு வேலிக்கு பூச்சினை பூசுதல், நீரியல் தாவரங்களை சேர்த்தல் மற்றும் அந்தூரியம் பகுதியை மேம்படுத்தல் போன்ற 03 | Covid 19 தொற்று நிலைமை காரணமாக ஒப்பந்தக்காரர்கள் சங்கிலி இணைப்பு வேலிக்கு பூச்சினை பூசுதல், நீரியல் தாவரங்களை சேர்த்தல் ஆரம்பிக்கப்படவில்லைஅந்து ாரியம் பிரிவினை | குறித்த நிர்மாண செயற்பாடுகளை உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | |
|---|---|
| செயற்பாடுகளுக்காக ரூபா 2,370,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அச்செயற்பாடுகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை | மேம்படுத்தல் பூங்காவின் புதிய திட்டமாக இருப்பதால் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 14 ஆம் இலக்க வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட மாதிரியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய வரைவு செயலாற்றல் அறிக்கையின் இலக்கின் கீழ் பூக்கள் வளர்ப்பு மற்றும் பூங்காக்கள் அலங்காரம் தேசிய டிப்ளோமா NVQ - 5 மற்றும் NVQ - 6 மட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் தொழில்துறை சான்றிதழை வழங்குதல் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அந்த இலக்கினை நிறைவேற்றுவதற்காக உரிய நடவடிக்கைகளின் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு திட்டங்கள் தயாரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது | செயலாற்றல் அறிக்கையின் இலக்கினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1(ஆ) இன் பிரகாரம் ரூபா 500,000 இனை மிகைக்கும் பொருட்கள் அல்லது சேவைகளுக்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கைக்கு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் தேசிய தாவரவியல் ஆய்வுகூடம், பூக்கள் வளர்ப்பு ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் ஹக்கல தாவரவியல் பூங்காவினால் 9 சந்தர்ப்பங்களில் ரூபா 22,023,990 ஆன பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்வதற்குரிய உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ஒப்பந்தங்களுக்காக மதிப்பீடு தயாரிக்கும் போது Provisional sum (PS) விடயங்கள் ஒப்பந்தமொனறினுள் கிரயத்தை தீர்மானிப்பதற்காக போதியளவில் இனங்காண முடியாத திட்டமிடப்பட முடியாத போதியளவு விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத விடயங்களே உள்ளடக்கப்படுகின்றன. எனினும் பூங்கா பொறுப்பாளர் விடுதி (Curator's Bungalow) திருத்தம் மற்றம் கம்பஹா தாவரவியல் பூங்காவின் நாற்றுக்கள் விற்பனை கூடம் நிர்மாணம் போன்ற ஒப்பந்தங்களுக்காக தயாரிக்கப்பட்டிருந்த அளவீட்டுப் பத்திரங்களில் ரூபா 1,325,000 ஆன பெறுமதியொன்று Provisional sum (PS) என பென்றி கபட் வைத்தல், பீங்கான் கற்கள் பிடித்தல் மற்றம் பொலிகாபனேட் கூரைத் தகடு பொருத்துதல் போன்றவை உள்ளடக்கப்பட்டிருந்தது. | சந்தையில் காணப்படும் பொருட்களுக்காக இறக்குமதி கட்டுப்பாடு விதித்தல் மற்றும் அமெரிக்க டொலருக்கு ஒப்பீடாக ரூபாய் பெறுமதி வீழ்ச்சியடைந்தமை காரணமாக காணப்பட்ட விலைகள் எப்போதும் வேறுபடுதல் மற்றும் விலை விபரங்களை சந்தையில் கண்டுபிடிக்க முடியாமையால் Provisional sum (PS) உள்ளடக்கியதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | குறித்த வேலை அல்லது ஒப்பந்தத்தின் ஒவ்வொரு விடயத்திற்குரியதாக இயலுமான வரை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அளவீட்டுப்பத்திரங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 பிரகாரம் அரசின் பணம், வருமானம், முத்திரை அல்லது பொருட்களுக்கு பொறுப்பேற்றல் பொறுப்பாக இருத்தல் அல்லது காசு தொடர்பாக நிர்வாக ரீதியில் பொறுப்புக் கூற வேண்டிய அல்லது அதிகாரமளிப்பின் கீழ் அச்செயற்பாடுகளை கையளிக்கப்பட்டுள்ள அல்லது 612 ஆம் அதிகாரத்தின் கீழான அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய போதிலும் தேசிய தாவர ஆய்வுகூடம் மற்றும் ஹக்கல தாவரவியல் பூங்கா என்பவற்றில் பணம் மற்றும் பொருட்கள் தொடர்பாக பொறுப்புக்கூறும் 06 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பிணை அறவிடப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பஹா தாவரவியல் பூங்காவின் பூங்கா நாற்றுமேடை பிரிவில் உள்ள நாற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது பௌதீக ரீதியாக காணப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை மற்றும் புத்தகங்களில் குறிப்பிடப்பட்ட நாற்றுக்களின் மீதிகளுக்கு இடையே 7 வகைகளுக்குரிய ரூபா 203,460 பெறுமதியான 4921 வகையான நாற்றுக்களில் பற்றாக்குறையொன்று காணப்பட்டது. | இவை நாற்றுக்களில் பற்றாக்குறையொன்றல்ல எனவும் புத்தகங்கள் சரியாக நாளதுவரை யாக்கப்படாமை அடிப்படையில் ஏற்பட்ட பற்றாக்குறையொன்று என அறிவிக்கப்பட்டிருந்தது. | பதிவேடுகளை முறையாக பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பற்றாக்குறையொன்று தொடர்பாக முறையான பரிசோதனை யொன்றை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | கம்பஹா தாவரவியல் பூங்காவின் மலசலகூட முறைமை மற்றும் களஞ்சிய கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திற்கு பெறுமதி சேர் வரியில்லாமல் ரூபா 5,544,956 தொகைக்கு வழங்க வேண்டுமென பரிந்துரைத்திருந்த போதும் பெறுகை குழுவினால் அதனைக் கருத்திற் கொள்ளாமல் ஒப்பந்தத்தை இரண்டாவது குறைந்த கேள்விதாரருக்கு பெறுமதி சேர் வரியில்லாமல் ரூபா 5,969,866 இற்கு வழங்கியதன் பேரில் அரசிற்கு ரூபா 424,910 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | இந்த கேள்வி 2020 பெப்ரவரி 02 ஆந் திகதியே திறக்கப்பட்டுள்ளதால் 2020 நவம்பர் 9 ஆந் திகதிய 4/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை அடிப்படையாக கொள்ளப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. | கேள்வி மதிப்பீடு குறைந்த கிரயத்தை ஏற்படுத்தும் பெறுபேறொன்றாக ஆகக்கூடிய பொருளாதார நலன்களை தரும் வகையில் மேற்கொள்ள வேண்டும். |

**3.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஓய்வுபெற்ற, மரணித்த, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட, உத்தியோகத்தர்களின் | ஓய்வூதிய கொடுப்பனவிற்காக அமைச்சரவை பத்திரமொன்று அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை கடன் மீதிகள் அறவிப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 27 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,758,347 ஆன கடன் மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | அது தொடர்பான செயற்பாடுகள் முடிவடைந்தவுடன் கடன் மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பூங்காக்களின் செயற்பாடுகளை முறையாகவும் படிப்படியாக பேணிச்செல்வதற்கு ஊழியர் தேவைப்பாட்டினை பொருத்தமான சந்தர்ப்பங்களில் இனங்கண்டு தேவையான சந்தர்ப்பங்களில் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை 162 வெற்றிடங்கள் காணப்பட்டன. | கருத்து தெரிவிக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |